IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW1

Defense :

| | | |
|---|---|---|
| Name | : | பூங்காவனம் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | வடுகசாத்து |
| Taluk | : | ஆரணி |
| Caste | : | |
| Calling | : | தறி வேலை |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2025.

**முதல் விசாரணை**

1. எதிரி ஆஜர். நான் கதவு இலக்கம் எண்.7/16 கருனிக்கர் தெரு, வடுகசாத்து ஆரணியில் வசித்து வருகிறேன். தறி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி அன்பு வேலிடம் நான் சீட்டு கட்டி வந்தேன். ஆஜர் எதிரி ஆரணி சைதாப்பேட்டையை சேர்ந்தவர்.

2. நான் 2019 முதல் 2020 வரை எதிரியிடம் ரூ.5,00,000/-ற்கான சீட்டு கட்டி வந்தேன். சீட்டு முடிந்த பிறகு எதிரி சீட்டு பணத்தை எனக்கு கொடுக்கவில்லை. எதிரியிடம் 200 நபர்களுக்கு மேல் சீட்டு கட்டி வந்தார்கள். நான் எதிரியின் வீட்டிற்கு நான்கு ஐந்து முறை சென்று பணத்தை கேட்டேன் அந்த சமயத்தில் எதிரி அவரது வீட்டில் இல்லை. அதன் பிறகும் எதிரியின் வீட்டிற்கு பல முறை சென்று பார்த்த போது எதிரியின் வீடு பூட்டபட்டு இருந்தது. எதிரி ஊரில் இல்லை.

3. 20.03.2021 அன்று எதிரியை நகராட்சி அலுவலகத்திற்கு எதிரில் பகல் 3 மணிக்கு பார்த்தேன். அப்போது எதிரியிடம் என் பணம் என்ன ஆனது என்று கேட்டேன். அதற்கு எதிரி தெவிடியாப்பையா உன்னை அடித்தால் ஊரில் உள்ளவர்கள் யாரும் என்னிடம் பணம் கேட்க மாட்டார்கள் என்று சொல்லி உருட்டு கட்டையால் என் தலை மீது அடிக்க வந்தார் நான் அந்த சமயம் ஒதுங்கி கொண்டதால் என் வலது தோல் பட்டையில் உருட்டு கட்டையால் அடித்தார்.

4. எதிரி என்னை அடித்த உருட்டு கட்டையை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். என்னிடம் காட்டப்படும் உருட்டு கட்டை எதிரி என்னை அடிக்க பயன்படுத்தியதா என்றால் ஆமாம். ன்னிடம் காட்டப்படும் உருட்டு கட்டை **சா.பொ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எதிரி என்னை உருட்டு கட்டையால் அடித்த உடன் நான் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்து விட்டேன் அப்போது அங்கு இருந்தவர்கள் வேலு மற்றும் ஞானவேல் ஆகியோர் என்னை ஆரணி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள் என்னை மருத்துவமனையில் போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் போலீசாரிடம் கொடுத்தது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் கையெழுத்து செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள என் கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த நேரம் மதியம் 3.00 மணி ஆகும். சம்பவ இடத்தில் இருந்து அருகாமையில் காவல் நிலையம் உள்ளதா அல்லது மருத்துவமனை உள்ளதா என்றால் மருத்துவமனை தான் உள்ளது. சம்பவ இடத்தில் இருந்து 300 மீட்டர் தொலைவில் மருத்துவமனை இருக்குமா என்றால் இருக்கும். சம்பவம் நடந்து 10 நிமிடங்கள் கழித்து நான் மருத்துமனைக்கு சேர்க்கபட்டேன்.

2. என்னை மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார்கள். சம்பவம் நடந்த தினம் ஞாயிற்றுக்கிழமையா அல்லது அரசு விடுமுறை தினமா என்றால் எனக்கு நினைவில்லை. சம்பவம் நகராட்சி கேட் முன்பாக நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது நகராட்சி அலுவலக கேட் மூடப்பட்டு இருந்தது.

3. சம்பவத்திற்கு பிறகு அங்கு கூடி இருந்த நபர்கள் யார் யார் என்றால் சுமார் 10 நபர்கள் கூடி இருப்பார்கள். அவர்களில் வேலு மற்றும் ஞானவேல் ஆகியோர் எனக்கு தெரிந்தவர்கள் ஆவார்கள். நான் மயக்கத்தில் இருந்ததால் மற்ற நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது.

4. வேலு சேவூரை சேர்ந்தவர் ஞானவேல் சைதாபேட்டையை சேர்ந்தவர். வேலு மற்றும் ஞானவேல் ஆகியோரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர்களும் ஆஜர் எதிரியிடம் சீட்டு கட்டி வந்த வகையில் எனக்கு அவர்களை தெரியும்.

5. நான் ஆஜர் எதிரியிடம் 2019 முதல் 2020 வரையிலான கட்டி வந்த சீட்டு ரூ.5,00,000/-ற்கான சீட்டு ஆகும். அந்த சீட்டு 20 மாதங்களுக்கான சீட்டு ஆகும். 2019 ஆண்டில் குறிப்பாக எந்த மாதம் சீட்டு கட்ட ஆரம்பித்தேன் என்றால் நினைவில்லை. 2019 முதல் 2020 வரை எத்தனை மாதங்கள் என்றரல் 12 மாதங்கள் ஆகும்.

6. நான் எதிரியிடம் கட்டிய சீட்டிற்கான ரசீது வீட்டில் உள்ளது இந்த விவரத்தை போலீஸ் விசாரணையின் போது சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அவ்வாறு என்னிடம் உள்ளதாக சொல்லும் ரசீதுகளை போலீசார் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா

என்றால் இல்லை. 2020 பிறகு நான் கட்டிய சீட்டுத்தொகையை எதிரி கொடுக்கவில்லை என்று இந்த வழக்கு புகார் கொடுப்பதற்கு முன்பு வரை நான் எதிரிமீது வேறு எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

7. எதிரியிடம் சீட்டு கட்டிய 100 நபர்களுக்கு மேற்பட்டோர் திருவண்ணாமலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரி மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு புகார் கொடுத்த நபர்களுடன் நானும் சென்று புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

8. நான் போலீசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலம் எத்தனை தாள்களில் எழுதப்பட்டது என்றால் எத்தனை தாள்கள் என்று தெரியாது. ஆனால் ஒரு கையெழுத்து மட்டும் நான் புகாரில் செய்தேன். நான் சிகிச்சை முடித்து 3 நாட்கள் கழித்து மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டேன். அவ்வாறு நான் டிஸ்சார்ஜ் ஆன பிறகு தான் முதல் தகவல் அறிக்கை நகலை பெற்றேன். ஆனால் முதல் தகவல் அறிக்கை நகல் 20ம் தேதி பெறப்பட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் தெரியவில்லை.

9. நான் மயக்கத்தில் இருந்து தெளிவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 1 மணி நேரம் ஆனது. எனக்கு அடிபட்டு அரை மணி நேரத்தில் போலீசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள். என் சராசரி உயரம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக எனக்கும் எதிரிக்கும் சம்பவத்திற்கு முன்பு வாய் தகராறு எதாவது ஏற்பட்டதா என்றால் இல்லை.

10. நான் என்னுடம் 200 நபர்கள் சீட்டு கட்டி ஏமாந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பணம் கட்டிய நபர்களில் எந்த நபர் கட்டிய தொகை அதிகமானது என்றால் தெரியாது. என்னை மருத்துவமனையில் சேர்த்த வேலு மற்றும் ஞானவேல் ஆகியோருக்கு எதிரி எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11. எதிரி சீட்டு பணத்தை ஏமாற்றி விட்டு ஊரை விட்டு ஓடி விட்டதாக நான் சொல்லும் தேதி என்ன என்றால் எனக்கு தெரியாது. எதிரி ஊரில் உள்ளரா இல்லையா என்று எதிரியின் அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளில் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரி சீட்டு பணத்தை ஏமாற்றி ஊரை விட்டு ஓட வில்லை என்றும் அவரது வீட்டில் தான் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

12. சம்பவ தினத்தன்று அன்றைய தேதியில் தமிழக முதலமைச்சராக இருந்த திரு. எடப்பாடி. பழனிச்சாமி ஆரணிக்கு வந்தார் என்றும் அப்போது எதிரி சீட்டு பணத்தை ஏமாற்றியது சம்மந்தமாக முதலமைச்சரின் காரை முற்றுகையிட்டதால் காவல் துறை அதை தடுத்தார்கள் என்றும் அதனால் தான் போலீசார் எதிரி மீது இந்த பொய்யான வழக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல.

13. எதிரி என்னை உருட்டு கட்டையால் தோல் பட்டையில் அடித்த போது எனக்கு வீக்க காயம் அல்லது சிராய்ப்பு காயம் அல்லது ரத்த காயம் எதுவும் ஏற்பட்டதா என்றால் இல்லை. உள்காயம் தான் ஏற்பட்டது. எனக்கு தோல் பட்டையின் பின்புறத்தில் காயம் ஏற்பட்டது.

14. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெற இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் எதிரியை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்த பிறகு தான் என்னிடம் புகார் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

15. நான் புகார் வாக்குமூலம் கொடுக்கும் போது மயக்கத்தில் இருந்தேனா என்றால் மயக்கத்தில் தான் இருந்தேன் ஆனால் யார் வருவது போவது என்று எனக்கு தெரியும். நான் சீட்டு

கட்டியதாக சொல்லும் சீட்டானது அரசு பதிவு செய்யப்பட்ட சீட்டு அல்ல என்றால் சரிதான். அரசு பதிவு செய்யப்படாத சீட்டினை நான் கட்டி ஏமாந்துவிட்டு எதிரி பணம் கொடுக்கவில்லை என்று அவர் மீது இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.